Kurusady
CATECHISM

# புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

**மறைக்கல்வி - வினாடிவினா 012 - டிசம்பர் 26, 2021 முதல் ஜனவரி 1, 2022 வரை.**

## பன்னிரண்டாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

பெருவிழாக்களுக்கு முந்தின நாள் எவ்வாறு அழைக்கப்படுகிறது? திருவழிபாடு எண் -109 (348)

[ ] நள்ளிரவு
[ ] திருவிழிப்பு
[ ] மாலை நேரம்
[ ] பாஸ்கா நாள்

**கேள்வி 02**

திருவருகைக் காலம் எத்தனை நாள்கள் கொண்டாடப்படுகிறது?
திருவழிபாடு எண் -110 (354)

[ ] நான்கு வாரங்கள்
[ ] இரண்டு வாரங்கள்
[ ] ஆறு வாரங்கள்
[ ] எட்டு வாரங்கள்

**கேள்வி 03**

திருவருகைக் காலத்தில் எத்தனை ஞாயிறுகள் அடங்கி இருக்கின்றன?
திருவழிபாடு எண் -111 (355)

[ ] மூன்று
[ ] நான்கு
[ ] ஆறு
[ ] எட்டு

**கேள்வி 04**

திருவருகைக் காலத்தில் பயன்படுத்தப்படும் ஊதா நிற உடை எதற்கு அடையாளம்?
திருவழிபாடு எண் -111 (357)

[ ] தவம்
[ ] ஜெபம்
[ ] நோன்பு
[ ] தர்மம்

**கேள்வி 05**

கிறிஸ்து பிறந்த எட்டாம் நாளில் எந்த விழா கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -112 (361)

[ ] தூய ஆவியார் பெருவிழா

[ ] பெந்தக்கோஸ்து பெருவிழா

[ ] திருக்காட்சி விழா

[ ] மரியா இறைவனின் தாய் பெருவிழா

**கேள்வி 06**

மரியா 'இறைவனின் தாய்' விழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -112 (361)

[ ] பிப்ரவரி 14

[ ] ஜனவரி 1

[ ] செப்டம்பர் 8

[ ] மார்ச் 26

**கேள்வி 07**

திருக்காட்சி என்ற தமிழ் சொல்லின் கிரேக்கம் எது? திருவழிபாடு எண் -112 (364)

[ ] குளோரியாம்

[ ] எபிபனியா

[ ] மயோரம்

[ ] தெர்சியா

**கேள்வி 08**

இறை-மனித உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் அருளடையாளம் எது?

திருவழிபாடு எண் -123 (408)

[ ] உறுதிப்பூசுதல்

[ ] நற்கருனை

[ ] திருமணம்

[ ] திருமுழுக்கு

**கேள்வி 09**

துய ஆவியார் பெருவிழா எந்த காலம் வரை நீடிக்கும்?

திருவழிபாடு எண் -123 (411)

[ ] பாஸ்காக் காலம்

[ ] திருவருகைக் காலம்

[ ] தவக்காலம்

[ ] பொதுக்காலம்

**கேள்வி 10**

திருத்தூதர்கள் மேல் தூய ஆவியார் எந்த வடிவில் நெருப்பு போன்று இறங்கி வந்தார்?

திருவழிபாடு எண் -124 (414)

[ ] புறா

[ ] நாக்கு

[ ] மேகம்

[ ] மின்னல்

**கேள்வி 11**

பெந்தக்கோஸ்து என்ற கிரேக்கச் சொல்லுக்கு பொருள் என்ன? திருவழிபாடு எண் -124 (415)

[ ] ஐம்பதாவது

[ ] பத்தாவது

[ ] நூறாவது

[ ] நாற்பதாவது

**கேள்வி 12**

கிறிஸ்து அரசர் திருநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -125 (421)

[ ] ஆண்டின் பொதுக்காலத்தின் முதல் வாரத்தில்

[ ] ஆண்டின் பொதுக்காலத்தின் இறுதி வாரத்தில்

[ ] ஆண்டின் பொதுக்காலத்தின் மூன்றாம் வாரத்தில்

[ ] ஆண்டின் பொதுக்காலத்தின் இரண்டாம் வாரத்தில்

**கேள்வி 13**

புனித யோசேப்பு பெருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -131 (445)

[ ] ஜனவரி 1

[ ] பிப்ரவரி 2

[ ] செப்டம்பர் 8

[ ] மார்ச் 19

**கேள்வி 14**

புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -131 (445)

[ ] ஜனவரி 1

[ ] ஜுன் 24

[ ] ஆகஸ்ட் 15

[ ] ஜுன் 29

**கேள்வி 15**

புனித பேதுரு, பவுல் பெருவிழா எப்போது?  திருவழிபாடு எண் -131 (445)

[  ]  ஜுன் 25

[  ]  நவம்பர் 1

[  ]  ஜுன் 29

[  ]  மார்ச் 19

**கேள்வி 16**

அனைத்து புனிதர்களின் பெருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -131 (445)

[  ]  மார்ச் 19

[  ]  நவம்பர் 1

[  ]  செப்டம்பர் 8

[  ]  ஜுன் 24

**கேள்வி 17**

கிறிஸ்தவ நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக தங்கள் உயிரைக் கொடுத்தவர்கள்? யார்?

திருவழிபாடு எண் -132 (450)

[  ]  இறைவாக்கினர்கள்

[  ]  மறைப்பணியாளர்கள்

[  ]  மறைச்சாட்சியர்

[  ]  மேய்ப்பர்கள்

**கேள்வி 18**

தங்கள் அருள்பணி வாழ்வில் புனிதம் கொண்டு வாழ்ந்தவர்கள் யார்?

திருவழிபாடு எண் -132 (451)

[  ]  இறைவாக்கினர்கள்

[  ]  மேய்ப்பர்கள்

[  ]  மறைச்சாட்சியர்

[  ]  மறைப்பணியாளர்கள்

**கேள்வி 19**

கிறிஸ்துவின் மேய்ப்புப் பணியை பின்பற்றியவர்கள் யார்?

திருவழிபாடு எண் -132 (452)

[  ]  மறைச்சாட்சியர்

[  ]  மேய்ப்பர்கள்

[  ]  இறைவாக்கினர்கள்

[  ]  மறைப்பணியாளர்கள்

**கேள்வி 20**

தமஸ்கு நகர் காட்சியின் போது இயேசுவால் அழைக்கப்பட்டவர் யார்?

திருவழிபாடு எண் -131 (448)

[ ] புனித மத்தியாஸ்

[ ] புனித பவுல்

[ ] புனித தோமா

[ ] புனித பர்னபா

**கேள்வி 21**

தூய ஆவியாரால் நியமிக்கப்பட்ட திருத்தூதர் யார்?

திருவழிபாடு எண் -131 (448)

[ ] புனித தோமா

[ ] புனித பர்னபா

[ ] புனித பவுல்

[ ] புனித மாற்கு

**கேள்வி 22**

புனித யோசேப்பு எதற்கெல்லாம் பாதுகாவலர்?

திருவழிபாடு எண் -131 (447)

[ ] திருச்சபை

[ ] தொழில், படிப்பு

[ ] நன்மரணம், கற்பு

[ ] மேற்கூறிய அனைத்தும்

**கேள்வி 23**

இறக்கும் வரையிலும் திருமணம் செய்யாமலிருந்து கற்பு என்ற புண்ணியத்தைக் காப்பாற்றி வாழ்ந்த புனிதப் பெண்களை எவ்வாறு அழைக்கிறோம்?

திருவழிபாடு எண் -133 (457)

[ ] துறவியர்

[ ] மறைச்சாட்சியர்

[ ] கன்னியர்

[ ] மேய்ப்பர்கள்

**கேள்வி 24**

புனித மத்தேயு நற்செய்தியாளரின் திருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -133 (458)

[ ] செப்டம்பர் 21

[ ] ஏப்ரல் 25

[ ] அக்டோபர் 18

[ ] பிப்ரவரி 2

**கேள்வி 25**

புனித மாற்கு நற்செய்தியாளர் திருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?

திருவழிபாடு எண் -133 (458)

[ ] செப்டம்பர் 21

[ ] ஏப்ரல் 25

[ ] அக்டோபர் 18

[ ] ஏப்ரல் 20

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [✔] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.